பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

சுடர்: 4 சுக்கில ஞூ சித்திரை மீ 12 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ரமழான் பிறை 18 (25-04-1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-118

A/L 91

பௌதிகவியல்:
திரு. சௌந்தி
செவ் - வியா - 1.00 மணி
இரசாயனவியல்:
திரு. செல்வா
செவ் - வியா - 2.00 மணி
தாவரவியல்:
திரு. பாலா
சனி - ஞாயிறு 4.30 மணி

நிரு ரியுசன் சென்ரர்,
கோண்டாவில்.

A/L 91

விலங்கியல்:
திரு. ஈசன்
திரு. ஞானம்
திங்கள்-வெள்ளி 4.30 மணி
தூய / பிரயோக கணிதம்
திரு. கிருஷ்ணு
சனி-ஞாயிறு 8.30 - 10.30 மணி

நிரு ரியுசன் சென்ரர்,
கோண்டாவில்.

# மீண்டும் இலங்கைக்கு வருமாறு ராஜீவுக்கு பிரேமா அழைப்பு!

## புதிய தூதர் மூலம் விடுக்கப்பட்டது

கொழும்பு, ஏப்ரல் 25

**மீண்டும் ஒரு தடவை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்திக்கு, இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா நேற்று அழைப்பு விடுத்தார்.**

**இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதர் திரு. மெஹ்ரோத்ரா மூலம் இந்த அழைப்பை ஜனாதிபதி திரு. பிரேமதாஸா விடுத்தார்**

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதர் திரு. மெஹ்ரோத்ரா நேற்றுக் காலை ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்து தமது நியமனப் பத்திரங்களைக் கையளித்தார்.

அதன் பின்னர் இருவரும் 45 நிமிடங்கள் வரை பேசிக் கொண்டனர்.

''இந்திய - இலங்கை ஆகிய நாடுகளின் பரஸ்பர நன்மைக்கென இரு நாடுகளுக்கும் இடையே எல்லாத்துறைகளிலும் நெருங்கிய ஒத்துழைப்பு இருக்க வேண்டும்'' -இப்படி திரு. பிரேமதாஸ அப்போது தெரிவித்தார்.

''பிரதமர் ராஜீவ்காந்தியை மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்யும்படி அன்புடன் அழைக்கின்றேன்'' -என்றும் திரு. பிரேமதாஸா சொன்னார்.

இலங்கையுடனான உறவுகளைப் பலப்படுத்த இந்தியா கொண்டுள்ள விருப்பத்தைத் தெரிவித்து, பிரதமர் ராஜீவ் காந்தி எழுதிய கடிதம் ஒன்றை திரு. பிரேமதாஸாவிடம் தாம் கையளித்ததாக திரு. மெஹ்ரோத்ரா பின்னர் தெரிவித்தார். (உ-எ)

## தேடுதல் ஓய்ந்தது

நெடுந்தீவு, ஏப் 25

நெடுந்தீவில் நடந்து வந்த தேடுதல் நடவடிக்கை ஓய்ந்து விட்டது.

மூன்று தினங்கள் நடத்திய தேடுதல் நடவடிக்கைகளின் பின் விசாரணைக்காக பொன்னுத்துரை என அழைக்கப்படும் ஞா. ஜோசேப் [49 வயது] அன்ரன் [33 வயது] ஆகிய இருவரையும் அமைதிப்படையினர் கூட்டிச் சென்றுள்ளனர், [ஓ-ச 111)

## மாகாண சபைக்கு அச்சு இயந்திரம்

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உபயோகத்திற்கு என்று இந்திய அரசு ஒரு கோடி ரூபா பெறுமதியான அச்சுயந்திரத் தொகுதியை வழங்கவுள்ளது. (உ-எ)

### சுபநேரம்

சித்திரை - 12
சுபநேரம்;
10.30 முதல் 12.00 வரை
ராகுகாலம்:
03.00 முதல் 04.30 வரை

## நகரின் பல பகுதிகளுக்கும் யுனிசெப் குழுவினர் சென்றனர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

'யுனிசெப்' அமைப்பைச் சேர்ந்த குழுவினர் நேற்று யாழ். நகரின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து பார்வையிட்டனர்.

யாழ். மத்திய கல்லூரிக்குச் சென்ற குழுவினர், 'யுனிசெப்' நிதியுதவியில் அங்கு நடைபெற்று வரும் குளிரூட்டல் வகுப்பையும், பாஷையூர்ப் பகுதி பாடசாலை ஒன்றில் நடைபெறும் மீன்பிடிப் படகுகள் கட்டும் வேலைத்தலம் ஒன்றையும் பார்வையிட்டனர்.

யாழ். கல்வித் திணைக்களத்திற்குச் சென்ற 'யுனிசெப்' குழுவினர் அங்கும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். (ஓ-9)

## கைதான யாழ். மீனவர்கள் தமிழகத்தில் விடுவிப்பு

சென்னை, ஏப்ரல் 25

இந்திய கடற்பகுதியில் சென்ற 13 ஆம் திகதி மீன்பிடித்துக்கொண்டிருந்த போது கைது செய்யப்பட்ட 9 இலங்கைத் தமிழ் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ராமேஸ்வரத்தில் உள்ள மாவட்ட மீனவர் சங்கத்தின் (6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கே. கே. எஸ். வீதியில் நேற்று நடந்த விபத்து!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

நேற்று யாழ். கே.கே.எஸ். வீதி (பூநாரி மரத்தடி)யில் அமைதிப்படை ஜீப் ஒன்றும், பயணிகள் மினிபஸ் ஒன்றும் மோதிக்கொண்டன.

அப்போது பஸ்ஸில் பயணம் செய்த பயணிகள் சிலரும் அமைதிப்படை ஜவான்களில் ஒரு சிலரும் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மினிபஸ் சாரதி தாக்கப்பட்டார் என்றும் சொல்லப்பட்டது. [ஓ]

## புலிகள் - அரசு பேச்சிற்காக

## பலத்த பாதுகாப்பு கொழும்பில் நேற்று முதல்

கொழும்பு, ஏப்ரல் 24

கொழும்பு மாநகரில் நேற்று முதல் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. அன்ரன் பாலசிங்கம் இவ்வார மத்தியில் அரசுடன் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்த கொழும்பு வருகிறார்.

இதன் காரணமாகவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுவோருக்கு எதிராகப் பொலீஸ் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. (உ-எ)

### விடுவிப்பு

ஒட்டுசுட்டான், ஏப் 25

மன்னாகண்டல் இந்திய படைமுகாமில் கடந்த மூன்று மாத காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த வ. ஜெகநாதன் கடந்த திங்கட்கிழமை இதனிடையே கொழும்பில் விடுவிக்கப்பட்டார். [ஓ-113]

## திருமலையிலிருந்து நேற்று யாழ்நகருக்கு பஸ் வந்தது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

திருகோணமலையிலிருந்து பஸ் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தது.

பாதுகாப்பு வசதி வழங்கப்படாமலேயே இந்த பஸ் இங்கு வந்ததாகச் சொல்லப்பட்டது.

திருமலையில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பை அடுத்து பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்த பஸ் இன்று திருமலைக்கு புறப்பட்டுச் செல்லும். (ஓ-9)

## யாழ் மாநகரசபை நூலகத்துக்கு

## ரூ. 6 லட்சம் பெறுமதியான நூல்கள் நேற்று கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 25

ரூபா 6 லட்சம் பெறுமதியான நூல்கள் நேற்று யாழ் மாநகர முன்னாள் ஆணையாளரும் தற்போது கிளிநொச்சி அரசாங்க அதிபருமான திரு. அன்ரன் அல்பிரட்டிடம் கையளிக்கப்பட்டன.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் திரு. ஜேம்ஸ் ஸ்பெயின் நூல்களைக் கையளித்தார்.

இந்த நூல்கள் அமெ (6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



இந்த முறை அணி வகுப்பு மரியாதை கிடையாது என்டதையும் அழைப்போடு சேர்த்து அறிவிச்சிருப்பாரோ......]

## வங்கிக்கு எடுத்துச் சென்ற ரூ. 9 லட்சம் வழியில் கொள்ளை

### நுகேகொடையில் சம்பவம்

கொழும்பு, ஏப் 25

நுகேகொடையில் வங்கிக்கு எடுத்துச் செல்லப்பட்ட 9 லட்சம் ரூபா பணம் நேற்றுக் காலை இனந்தெரியாதவர்களினால் கொள்ளையிடப்பட்டது.

அத்துருகிரியாவில் உள்ள சிகரெட் நிறுவனம் ஒன்றில் இருந்து இப்பணம், வாகனம் ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்டது.

வாகனம் நகரத் தொடங்கியதும் இனந்தெரியாத கோஷ்டி ஆகாயத்தை நோக்கிச் சுட்டது. அதைத் தொடர்ந்து வாகனம் நிறுத்தப்பட்டது.

இரண்டு பொதிகளில் பணத்தை எடுத்துக்கொண்ட கொள்ளைக் கோஷ்டி கார் ஒன்றில் தப்பிச் சென்றது. [உ-எ]

## அ. தி. மு. கவைச் சேர்ந்த எம். எல். ஏ. நேற்றுக் கைது!

அ. தி. மு. க.-எம் எல். ஏ. உக்கம்கந்த் நேற்றுக் கைது செய்யப்பட்டு பதினைந்து நாள் காவலில் வைக்கப்பட்டார்.

பொது உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கும் சட்டத்தின் கீழ் திரு. உக்கம்கந்த்தும் வேறு 32 அ. தி. மு. க. உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று தமிழ்நாடு சட்டசபையில் சபாநாயகர் தமிழ்க் குடிமகன் அறிவித்தார்.

திரு. உக்கம்கந்த் கைது செய்யப்பட்டது பற்றி விவாதிக்க அனுமதிக்கும்படி சட்டசபையில் அ. தி. மு. க. எம். எல்.ஏக்கள் கோரினர்.

அதற்கு சபாநாயகர் மறுத்து விட்டார். அதைத் தொடர்ந்து அ. தி. மு. க. எம். எல். ஏக்கள் வெளிநடப்புச் செய்தனர். (ஓ-எ)

## வெலி ஓயா காடுகளில் விசேட பாதுகாப்புப் படை

கொழும்பு. ஏப் 25

வெலிஓயாவில் குடியேற்றத் திட்டங்களுக்கு அருகில் உள்ள காடுகளில் விசேட படையினரை கடமையில் ஈடுபடுத்தும்படி பாதுகாப்புப் படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

வெலி ஓயாவுக்கு நேற்று முன்தினம் பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன விஜயம்செய்தார்.

அப்போதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். [உ-எ]

## சந்தேக நபர்கள் 8 பேர் கைது!

கொழும்பு, ஏப் 25

பாதுக்க பொலீஸ் நிலையத் தாக்குதலுக்கு பொறுப்பாக இருந்ததாகக் கூறப்படும் எட்டுச் சந்தேக நபர்களை பொலீஸார் கைது செய்தனர்.

கடந்த அக்டோபர் 28 இல் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் 4 பொலீஸார் கொல்லப்பட்டனர். இக் கோஷ்டியினர் 10 கொலைகளைச் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## தொற்று நோய் பாதிப்புக்குள்ளான இறைச்சியால் தோல் வியாதிகள்

### உருவாகும் என எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

கால்வாய் தொற்று நோய்க்கு இலக்கான கால்நடையின் இறைச்சியை உண்பதனால் வயிற்றுக் கோளாறு, வயிற்ரோட்டம், சொறி, சிரங்கு போன்ற தோல் வியாதிகள், தலையிடி, தலைசுற்று முதலியன ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். சுகாதார வைத்திய அதிகாரி எஸ். கதிர்காமர் விடுத்திருக்கும் அறிக்கையில் இதுபற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஆட்டு, மாட்டு இறைச்சியை உண்பதனால் கோமாரி, கால்வாய் நோய் போன்ற தொற்று வியாதிகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன என்று வடக்கு-கிழக்கு மாகாண சபை அரச நிர்வாகத்தால் எமது அவதானத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இம்மாதிரியான நோய்களைப் பரவாது தடை செய்வதற்கு, நோய்க்கிருமிகளால் பாதிக்கப்பட்ட இறைச்சியை பாவனையாளர்கள் உண்ணாமல் இருப்பதற்காக, இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு, மாடுகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாம் கேட்கப்பட்டுள்ளோம்.

இந்த நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள மிருகங்களின் இறைச்சியை உண்பது மிகவும் அபாயகரமானதால் யாழ். மாநகர மக்கள் யாவரும் இவ் இறைச்சியை வாங்கி உண்ணுவதை மறு அறிவித்தல் வரை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

—எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கால்நடை தொற்றுநோய் பற்றி விளக்கமாக தகவல் தரமுடியுமா?

### உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் பகிரங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

யாழ். குடாநாட்டில் உண்மையாக எந்தெந்தப் பகுதியில் ஆடு, மாடுகள் தொற்று நோயால் இறந்து கிடக்கின்றன? இதனைப் பகிரங்கமாக ஆதாரத்துடன் அறிவித்து மக்கள் வியப்பைத் தீர்த்து வையுங்கள்!

அப்படிச் செய்தால் யாழ். மாவட்டத்தில் உள்ள - அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள - அனைத்து இறைச்சிக் கடைகளையும் உடனடியாக மூடி, இறைச்சிப் பாவனையாளருக்கு எவ்வித ஆபத்தும் வராமல் காப்பாற்ற யாழ். மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கம் முன்னிற்கும்.

இவ்வாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு பகிரங்க வேண்டுகோள் ஒன்றை மேற்படி சங்கம் விடுத்திருக்கிறது.

சங்கத்தின் செயலாளர் திரு. க. சி. கிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இறைச்சிக் கடைகளை சீல் வைத்து மூடவேண்டும் என யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு - மக்கள் மத்தியிலும், அனுமதிப் பத்திரம் பெற்ற இறைச்சிக்கடை வியாபாரிகள் மத்தியிலும், எமது சங்க உறுப்பினர்கள் மத்தியிலும் பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதியில் கால்நடைகள் அதிகமாக இறந்தன? அல்லது எவ்விடங்களில், தெருவோரங்களில் ஆடுமாடுகள் இறந்து கிடந்தன என்பது பற்றி எந்த வித செய்திகளும் இல்லாமல் திடீரென அகாலமரணம் சம்பவித்தது போல் இவ்வறிவித் (6ஆம் பக்கம் பார்க்க)

## இறைச்சிக்கடைகள் நேற்று 'சீல்' வைக்கப்படவில்லை

### நோட்டீஸ் வழங்கப்பட்டதாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

யாழ் மாநகரசபைப் பகுதியில் இருக்கும் — அனுமதி பெற்ற — இறைச்சிக் கடைகளைச் சீல் வைத்து மூடும் நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான நடவடிக்கைகள் ஏதும் நேற்று எடுக்கப்படவில்லை.

எனினும் இறைச்சிக் கடைகளை மூடி, ஒத்துழைப்பு வழங்குமாறு கோரும் முன்னறிவித்தல் நோட்டீஸ்கள், மேற்படி கடைகளின் உரிமையாளர்களுக்கு நேற்றைய [6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Honda Reconditioned புதிய, பழைய Model C 90, C 70, C 50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு No: 390, மெயின் வீதி, கண்டுக்குளி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம். (10667)

## தேவை

புதிதாக தொடங்கப்பட்ட எமது வீடியோ ஸ்தாபனத்திற்கு பெண் காசாளர்தேவை யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது நேரில் தொடர்பு கொள்ளவும். வீடியோ விமல் 117, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி [மேல் மாடி] யாழ்ப்பாணம். [10664]

## உடன் தேவை

யாழ் நகரில் பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு அறைப் பணியாள் [Room boy] தேவை. நல்லொழுக்கமும் 15 வயதுக்கு உட்பட்டவரும் விரும்பத்தக்கது. 27 ஆந் திகதிக்கு முன் நேரில் வரவும். 67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (10672)

## போட்டோஸ்ரற்

காலை முதல் மாலை வரை மிகவும் தெளிவாகவும் விரைவாகவும் போட்டோஸ்ரற் பிரதிகள் எடுக்கப்படும் கூடுதல் பிரதிகளுக்கு கழிவு உண்டு நாடுவோர்: மச்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரிவீதி, பஸ்நிலையம், யாழ்ப்பாணம் (C/2292)

## SPOKEN ENGLISH

Spoken English புதிய பிரிவு சர்வகலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் நலன் கருதி முன்னிட்டு, ஆரம்பம் 29-4-89 சனி/ஞாயிறு நாட்களில். நேரம் 2-30—4-00 p.m தொடர்பு:- S B Iyar இல 12, வைமன் வீதி, நல்லூர். (10663)

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises. 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

## கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் 'Sheena Farm' Rose Broilers B 380 பிரவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் 12. 05. 1989 இல் இருந்து ஒவ்வொரு கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும். விபரங்களுக்கு: R. S. K. Poultry Farm, Post office Road. Manipay, R. S. K Poultry Farm. Murugapathy Uduvil (மான்ஸ் பாடசாலைக்கு அருகாமை, டச்சு ரோட்) (247)

## கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Cobb) புரொயிலர் குஞ்சு, (Dekalb) பிறவுண் சேவல் குஞ்சு (25. 4. 89) செவ்வாய்கிழமை விநியோகிக்கப்படும். சேவல் குஞ்சு விலை ரூபா 4. 50 தொகையாக எடுப்பவர்களுக்கு விசேஷ சலுகை உண்டு. முன்கூட்டியே பதிவு செய்க இல.9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் (10635)

Bairaha Farm புரொயிலர் குஞ்சுகள் திங்கட்கிழமை (24-4-89)இலும், Hyline வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்புச் சேவற் குஞ்சுகள் செவ்வாய்க்கிழமை (25-4-89)இலும் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் புதன்கிழமை (26-4-89)இலும் விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (225)

## பொலிஸ் நிலைய வீதி திறப்பு

சுமார் 1½ வருடங்களாக மூடப்பட்டிருந்த மட்டக்களப்பு பொலீஸ் நிலைய முன் பக்க வீதி வாகனப்போக்குவரத்துக்கு தற்போது திறக்கப்பட்டுள்ளது.

லொறி, பஸ் தவிர சகல வாகனங்களையும் இவ்வழியாக செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. (க-21)

## சேவாச்சிரம கல்வி நிதி

பருத்தித்துறை, ஏப்ரல். 25 பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கு கல்வி நிதி வழங்கும் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் வட இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் செல்வி க. யோகாம்பிகைக்கு அன்னை ஸ்ரீ சாரதா தேவி புலமைப் பரிசில் வழங்கியுள்ளது.

இப் புலமைப் பரிசிலுக்கான நிதி வருடந்தோறும் வழங்கப்படுமெனவும் இம் மாணவி பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறும் வரை தொடர்ந்து வழங்கப்படுமெனவும் சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா அறிவித்துள்ளார். (க-118)

## முருகமூர்த்தி ஆலய புனருத்தாரண வேலை

புங்குடுதீவு கிழக்கு, விராமலை வயலூர் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயப் புனருத்தாரண வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

20 ஆம் திகதி காலை மூலஸ்தான அடிக்கல் நாட்டும் வைபவம் நடந்தேறியது.

பிரபல வர்த்தகர் திரு. மு. சி. சின்னத்துரை மூலஸ்தான அடிக்கல்லை நட்டார்.

## ★ பிறந்த தின வாழ்த்து ★

### செல்வி உ. கஸ்தூரி

25- 04- 1989

உதயசூரியன் சரோசா தம்பதியரின் செல்வப் புதல்வி உ. கஸ்தூரி தனது 3ஆவது பிறந்த தினத்தை 25-04-89 அன்று ஜெர்மனியில் அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். அவரை ஜெர்மனியிலுள்ள அப்பா, அம்மா, சந்திரன் பெத்தா, சங்கரி, யாழ்ப்பாணத்திலுள்ள அப்பம்மா, அருள்மொழிச் சித்தி, அம்மம்மா, சகுந்தலாச் சித்தி, மாமாமார் பாட்டிமார், ஆகியோர் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(10671)

## யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி முறைசாரா கல்விப் பிரிவு

### பட்டமளிப்பு விழா - 1989

மேற்படி விழா 28-04-1989 (வெள்ளிக்கிழமை) பி. ப. 3 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மஸ்கன் சுப்பிரமணியம் ஞாபகார்த்த தொழில் நுட்ப மண்டபத்தில் நடைபெறும். 1987 / 88 இல் படவரைஞர், ஆங்கில தட்டச்சு பயிற்சி நெறிகளை இக் கல்லூரியில் மேற்கொண்ட மாணவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

1988 / 89 இல் பயிற்சி பெற்று பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் 26-04-1989 (புதன்கிழமை) பி. ப. 2 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

— சி. வே. மகேஸவேலு
அதிபர்

24. 04. 1989.

(C/ 2335)

## பிறந்த தின வாழ்த்து



### செல்வி சிவரூபி

No. 1010/6, K.K.S ரோட் நாச்சிமார் கோவிலடி லட்சுமிவாசாவில் வசிக்கும் நந்தகோபால் யோகலட்சுமி தம்பதிகளின் செல்வப்புதல்வி சிவரூபி 4வது பிறந்த தினத்தைத் தனது இல்லத்தில் இன்று(25 4.89 செவ்வாய்க்கிழமை) வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, தங்கை தனரூபி தம்பி கஜரூபன், அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்திமார், உற்றார் உறவினர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ் வென நாச்சி அம்பாளை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

(C/2325)

## TOEFL - 1989/90

TOEFL, GRE, GMAT and SAT Bulletins and Study Guides are now available at the Evelyn Rutnam Institute, University Lane, Jaffna. Interested persons please contact the Librarian for further information.

**United States Educational Foundation in Sri-Lanka,**
39, Flower Road, Colombo-7

[10666]

## BECON

[ஸ்ரீதர் சினிமா முன்பாக]
யாழ்ப்பாணம்.

### A/L 89-90-91

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | வரதராஜன் |
| வர்த்தகம் | - | ரட்ணம் |
| கணக்கியல் | - | மரியதாஸ் |
| அளவையியல் | - | S. S. மனோகரன் |
| தமிழ் | - | மீரா |
| இ. நாகரீகம் | - | ஜோதீஸ்வரன் |
| புவியியல் | - | இக்னேசியஸ் |
| அரசியல் | - | சுந்தரமூர்த்தி |

சனி, ஞாயிறு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

[C/2330]

## ★ NEW BECON ★

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சித்திராலயா ஸ்ருடியோவிற்கு முன்பாக)

### கலை, வர்த்தகம்

**A/L 90, 91** சனி, ஞாயிறு வகுப்புக்கள் புதிய பிரிவுகள்

பொருளியல்: வரதராஜன்
வர்த்தகம்: பிரபல விரிவுரையாளர்
கணக்கியல்: யோகராஜா அளவையியல்: S. S. மனோகரன்
இந் நாகரீகம்: ஜோதீஸ்வரன் தமிழ்: குழந்தை

ஆரம்பம்: 29-04-1989
சனி 10. 00 a.m

[சி-2327]

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

செவ் - வியாழன்
3. 15 ZOOLOGY
T. கெங்காதரன்
4. 15 BOTANY
D. வர்மா

வினா - விடை வகுப்பு

ஆரம்பம்: 25. 4. 1989

(சி/2333)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### கி. சிவக்கொழுந்து

(சிவா பொடி வேக்ஸ், உரிமையாளர்)

அன்னைமடியில்: 30 - 08 - 1942
இறைவனடியில்: 09 - 05 - 1985

திதி: 25 - 04 - 1989

வாழ்நாளில் துன்பம் என்னவென்று அறிந்திலோம்! துயர் காணோம் என்று இறுமாந்திருந்தோம்!! சீரும், சிறப்பும், சிரிப்பும், கலகலப்புமாய் எம்மை வாழ வைத்த அன்புத் தெய்வமே!!!

உங்கள் பிரிவால் உலகம் எமக்கு இருட்டாய் தெரிகின்றதே வெளிச்சத்தைக் காண்பதெப்போ? உங்கள் புன்சிரிப்பையும் நீங்கள் அள்ளிச் சொரிந்த அன்பையும் பாசத்தையும் இப் பிறவியில் எம்மால் மறக்கத்தான் முடியுமா;

உங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, மக்கள், உறவினர்.**

"புரூப்பொறுக்கி"
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

[250]

## கண்ணீர் அஞ்சலி



### சச்சிதானந்தன் தயாபரன் (தயா)

தாயின் மடியில்: 21 - 10 - 1961
இறைவனடியில்: 14 - 04 - 1989

14 - 04 - 89இல் ஆலடிசம்பவத்தில் அகால மரணம் அடைந்த ஆருயிர் நண்பன் தயாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கும் நோர்தேன் பார்மஸி ஸ்தாபனத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அவர்தம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நியூ பார்மெட் டிஸ்ரிபியூடர்ஸ்

[சி-2232]

## 31ஆம் நாள் அஞ்சலி



### புஸ்பகாந்தன் (புசி) — நவாலி
லெப்டினன்ட் காந்தி

தாய் மடியில்: 28 - 01 - 1970
தமிழ் மண்ணில்: 25 - 03 - 1989

உன்னினத்தின் அவலங்கள் போக்கிட நீ
உறுதிகொண்டாய்! உறவுதனை உதறி நண்பா
பன்னிரெண்டு வயதினிலே அணியிற் சேர்ந்தாய்
பகை நடுங்கும் வீரனாய் வெற்றி வாகை
வன்னியிலும் மூதூரின் காடுகளில்
வந்துனை அரவணைக்க மேன்மையுற்றாய்
இன்னுமுந்தன் சேவையிங்கு காத்திருக்க
இளவயதில் வீரசொர்க்கம் அடைந்தனையே!

- நண்பர்கள்

[10670]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்முறை கூடுதல் நிலப்பரப்பில் பம்பாய் வெங்காயச் செய்கை

## தனிப்பட்ட விவசாயிகளால் தருவிக்கப்பட்ட விதை வெங்காயத்துக்கு பெரும் கிராக்கி

அராலி, ஏப் 25

மிகவும் கூடுதலான பரப்பளவில் இம்முறை பம்பாய் வெங்காயம் செய்கை பண்ணப்பட உள்ளது.

இப்போகத்தில அராலியில் மட்டும் ஏறக்குறைய 500 ஏக்கரில் பம்பாய் வெங்காயம் பயிர் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் அயல்கிராமங்களான வட்டுக்கோட்டை, மூளாய், சுழிபுரம், வடலியடைப்பு போன்ற பகுதிகளிலும் கோப்பாய்-உரும்பராய் பகுதிகளிலும் விவசாயிகள் ஆயத்த வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விவசாயிகளால் மிகவும் விரும்பி பயிரிடப்படும் 'ராம்பூர் ரெட்' 'நாசிக் ரெட்' இன விதைகளை விவசாயிகள் நேரடியாக இந்தியாவில் இருந்து எடுத்து வந்து பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இப்பகுதியில் வெற்றிகரமாக பயிர் செய்ய முடியாத 'பூனுறெட்' என்னும் இன பம்பாய் வெங்காய விதையை விவசாய இலாகா இறக்குமதி செய்து 500 ரூபா விலையில் விற்பனைக்கு விட்டுள்ளது.

விவசாயிகளால் கொண்டு வரப்பட்ட இப்பகுதிக்கு உகந்த இனங்கள் ரூபா 375 முதல் 500 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றன

வெளியாரால் கொண்டு வரப்பட்டுள்ள விதைகளில் தரமுள்ள விதைகளை தெரிவு செய்து மக்கள் பெற்றுக் கொள்வதற்கு இப்பகுதி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் மிகவும் உதவி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-12)

## தைத்த ஆடை அன்பளிப்பு

பருத்தித்துறை, ஏப்ரல். 25

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் வசதி குறைந்த 75க்கு மேற்பட்ட பாடசாலை மாணவிகளுக்கு தைத்த ஆடைகளை புதுவருடத்தை முன்னிட்டு வழங்கியது.

இதற்கான துணிகளை விம்பிள்டன் கணபதி கோவில் நிர்வாகி திரு. ஏ. ரி எஸ். இரத்தினசிங்கம் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தாவிற்கு அன்பளிப்புச் செய்தார்

இத்துணிகளை சேவாச்சிரம தையற்கலை பயிலும் மாணவிகள் தைத்து வழங்கினர். (க-118)

## வறுமை ஒழிய வேண்டுமானால் அறியாமையை அகற்றவேண்டும்

### சர்வோதயப் பொறுப்பாளர் உரை

பருத்தித்துறை ஏப்ரல் 25

'பாமர மக்களின் வறுமையை முற்றாக ஒழிக்க வேண்டுமானால் அவர்களிடையே காணப்படும் அறியாமை என்னும் இருளை அகற்ற வேண்டும். இன்றைய கிராம மக்களின் சமுதாய ரீதியான அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் பொருளாதார ரீதியாக எவ்வகை உதவியை செய்த போதிலும் அது நாம் எதிர்பார்க்கின்ற முழுப் பலனையும் அளிக்காது. எனவே தான் சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருந்து புதிய சிந்தனைகள் உருவாக வேண்டுமென்ற நோக்குடன் கிராமங்கள் தோறும் பாலர் பாடசாலைகளை உருவாக்கி வருகின்றோம்.

வடமராட்சி கிழக்கில் பின் தங்கிய கிராமங்களில் ஒன்றான நாகர் கோவில் தரவை மக்களின் நீண்ட காலக் கோரிக்கைக்கிணங்க சர்வோதய பாலர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வடமராட்சி சர்வோதயப் பொறுப்பாளர் திரு. ப. தில்லைநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க-118)

## மீனவர் ஊர்வலம்

வெளியிடங்களைச் சேர்ந்த மீனவர்கள் நெடுந்தீவில் வாடிகளை அமைத்துத் தங்கித் தொழில் செய்ய அனுமதிக்கக் கூடாது எனக் கூறி நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு பொதுமக்களும் மீனவர்களும் ஊர்வலமாகச் சென்றனர்.

நெடுந்தீவு அன்னை வேளாங்கண்ணி மீனவர் சங்கம், குருநகர் ஆழ்கடல் மீனவர் அமைப்பு ஆகியவற்றின் தலைமையில் நடைபெற்ற ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

''வெளியூர் மீனவர்களை வெளியேற்று''

''நெடுந்தீவில் வாடிகள் அமைப்பதை அனுமதியோம்'' என்ற சுலோக அட்டைகளை அவர்கள் ஊர்வலத்தில் தம்முடன் எடுத்துச் சென்றனர். (ச-111)

## இலவச வள்ளங்கள்

அம்பாறை, ஏப்ரல் 25

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த நன்னீர் மீன் பிடிப்பாளர்களுக்கு இலவசமாக மீன்பிடி வள்ளங்கள் வழங்கப்படஉள்ளன.

புனர்வாழ்வு, புனருத்தாபனத் திட்டத்தின் கீழ் இந்த வள்ளங்களை வழங்க வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆவன செய்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் நிதி, மீன்பிடித் துறை அமைச்சர் திரு. பெ. கிருபாகரன் இந்தத்தகவலைத் தெரிவித்தார்.

முதல் கட்டமாக எதிர் வரும் மே மாதத்துக்குள் 100 மீனவர்களுக்கு வள்ளங்கள் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். [ச - 14]

## பிடிபட்ட திருடர்கள் இருவர் கட்டி வைக்கப்பட்டனர்

ஊர்காவற்றுறை, ஏப் 25

புதுவருடதினத்தன்று பகல் வேளையில் வீட்டிற் புகுந்து திருடமுயன்ற இரு திருடர்கள் கையும்மெய்யுமாகப் பிடிபட்ட சம்பவமொன்று சுருவிலில் இடம்பெற்றது.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:

புதுவருடதினத்தன்று காலை சுருவில் ஐயனார் தேவஸ்தானத்திற்கு அருகில் வசிக்கும் வர்த்தகரான திரு. சு. மார்க்கண்டு என்பவரின் குடும்பத்தினர் தங்கள் வீட்டு முற்றத்தில் பொங்கிக்கொண்டிருந்தனர்.

இவ்வேளை இரண்டு திருடர்கள் வீட்டின் பின்புறமாகக் கதவைத் திறந்து சென்று அறை ஒன்றில் இருந்த விலையுயர்ந்த றேடியோ, உயர்ரக மணிக்கூடு ஆகியவற்றை எடுத்துக்கொண்டு பின்புற மதிலால் பாய்ந்து தப்பி ஓட முயன்றனர். இதை அவதானித்த அயலவர் ஒருவர் உரத்துச் சத்தமிடவே ஏனைய பொதுமக்கள் திருடர்களைச் சூழ்ந்து கையும் மெய்யுமாகப் பிடித்துக்கொண்டனர்.

பின்னர் இரண்டு திருடர்களும் சுருவில் சனசமூக நிலையத்திற்கு முன்பாகக் கட்டி வைக்கப்பட்டனர்.

அமைதிப் படையினரோடு தொடர்பு கொள்ளப்பட்டு மாலையில் அமைதிப்படை முகாமில் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர், (க-16)

## வீடமைப்புக் கடன்கள்

மானிப்பாய், ஏப்ரல் 25

கிராமிய வீடமைப்புத் திட்டத்துக்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள நூறு பேருக்கு வீடமைப்பு கடன்கள் வழங்கப்பட்வுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் திரு. யோசேப் மரியான் இதனைத் தெரிவித்தார்,

வீடுகளை புதிதாக அமைத்துக் கொள்வதற்கும், வீடுகளைப் பழுது பார்ப்பதற்குமென இக்கடன் உதவிகள் வழங்கப்பட உள்ளன.

இதற்கென நான்கு லட்சத்து 93 ஆயிரம் ரூபாவை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஒதுக்கியுள்ளது. (ச-90)

## தையல் இயந்திரம் அன்பளிப்பு

பருத்தித்துறை.ஏப்ரல் 25

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமம் இரண்டு தையல் இயந்திரங்களை அன்பளிப்புச் செய்துள்ளது,

கரவெட்டிப்பகுதியைச் சேர்ந்தசெல்வி வி.நாகேஸ்வரிக்கும் கரவெட்டியில் சாந்தன்மின் தறி நிலையத்தால் நடத்தப்படும். யுவதிகளுக்கான ஆடை தயாரிக்கும் தொழிற் கூடத்திற்கும் இத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (க-118)

## கல்வி, கலை, கலாசாரத்தையும் கூ. சங்கங்கள் வளர்க்க வேண்டும்

### பாலர் கலைவிழாவில் உரை

'கூட்டுறவுச் சங்கங்கள் வெறுமனே உணவுப் பண்டங்களையும், கூப்பன் பொருள்களையும் விநியோகிக்கும் ஸ்தாபனங்களாக இருக்காது நம்கல்வி, கலை, கலாசாரத்தையும்வளர்க்கவேண்டும். இதனை தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் உணர்த்தியுள்ளது.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மகளிர்குழு ஆதரவில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பாலர் கலை விழாவில் உரையாற்றிய யாழ்கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. செ. இ. நித்தியராஜ் மேற்கண்டவாறு கூறினர்.

பாலர் பாடசாலைப் பிரச்சினைகளைத் தீர்த்தல் எனும் கருப்பொருளில் நடைபெற்ற ஐந்துநாள் வதிவிடக்களப் பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் இக்கலைவிழா தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. சிவமகாராசா தலைமையில் நடைபெற்றது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

திருமதி சசிதேவி கந்தையா வரவேற்புரை நிகழ்த்தினர்.

நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி கலந்துகொண்டார்.

தெல்லிப்பளை சுன்னாகம் ப. நோ. கூ. சங்கங்களைச் சேர்ந்த 40 பாலர் பாடசாலை ஆசிரியைகள் பயிற்சி நெறியில் பங்குபற்றிச் சான்றிதழ்களைப் பெற்றனர்.

கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் தலைமையில் பயிற்சிநெறி நடைபெற்றது.

கல்வி அதிகாரி திரு. சி. புவேந்திரன் ஆலோசகராகவும், கல்வி அதிகாரி திரு. ஆர் கே குலசேகரம் இணைப்பாளராகவும் கடமையாற்றினர்.

சுகாதாரக் கல்வியாளர் திரு. வைத்தீஸ்வரன் திருவாளர்கள்கே. வி. தனேஸ்வரன், ஏ. கே. நடராசா, சி. நாகராசா, பொன். ஸ்ரீவாமதேவன், செ. செல்வராஜா ஆகியோர் பயிற்சி அளித்தனர். (க-69)


# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,482 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க
"ஷப்ரு"வை நாடுங்கள்
நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ கருணாரத்ன, சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம் (A. I. B. Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம், (A. I. B. Lond.). பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி (B. A. Hons.)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜொனியன்ஸ் நடத்தும் கிரிக்கெட்:

# ஜொனியன்ஸ் "பீ" வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25
பெனின்சுலா குறுப்பின் ஆதரவுடன் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டியில் 22 ஆம் திகதி காலை நடைபெற்ற கால் இறுதி ஆட்டத்தில் நொதேர்ண் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய ஜொனியன்ஸ் [பீ] விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் [பீ] விளையாட்டுக் கழகம் 27. 2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெய்சங்கர் 29, சுதேஷ் 26, சுதாகர் 23, ராஜ்குமார் 19, கேஷன் 16, சாமுவல் ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஓ. வீ, கே. செந்தூர்வாசன், பாலன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், புவனேந்திரா 2 விக்கெட்டுக்களையும், அருள்மொழி 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய நொதேர்ண் அணி 23 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது.

உமாகாந்தன் 23 ஓட்டங்களையும் சிவமாறன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அகிலன், சுதாகர் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் பிரசாந்தன் 1 விக்கெட்டையும் பெற்றனர்.

கால் இறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்றதன் மூலம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள அரை இறுதிப் போட்டிகளில் பங்குபற்ற ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகம், ஷப்ரூ விளையாட்டுக் கழகம், கொக்குவில் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம், ஜொனியன்ஸ் [பீ] விளையாட்டுக் கழகம் ஆகிய சழகங்கள் தகுதி பெற்றன. [இ - 6]

## யாழ்- வட்டார மெய்வல்லுநர் போட்டி

குருநகர், ஏப்ரல் 25
யாழ். கல்வித்திணைக்களத்தால் யாழ்ப்பாண வட்டாரப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளும் விவரங்களும் வருமாறு.

13 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாவது இடம் யாழ்-புனித சாள்ஸ் ம. வி. இரண்டாவது இடம் புனித ஜேம்ஸ் ம. வி. மூன்ருவது இடம் புனித ஜோசப் வித்தியாலயம்.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாவது இடம் புனித ஜேம்ஸ் ம.வி. இரண்டாவது இடம் நல்லூர் தெற்கு விக்னேஸ்வர ம.வி.

19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவு முதலிடம் புனித ஜோசப்ம.வி., இரண்டாமிடம் சன்மார்க்க ம. வி. மூன்ருமிடம் நல்லூர் தெற்கு விக்னேஸ்வரம.வி. [ச-51]

## வட்டுக்கோட்டையில் நடந்த புதுவருட விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25
வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகமும் பொதுமக்களும் இணைந்து நடத்திய வருடாந்த புதுவருட விளையாட்டுப்போட்டிகள் 14ஆம் 15ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டையில் நடைபெற்றன.

தலைவர் இரா. ஜெயமோகன் தனது முன்னுரையில் வருடா வருடம் புதுவருட தினத்தன்று நடத்தப்படும் இப்போட்டிகள் பலவகையிலும் திறமை மிக்கவர்களைத் தெரிவு செய்யும் வகையிலும் ஒற்றுமையின் அடிப்படையிலும் பெற்ருர்,சுற்றத்தார்தம் முன் தம்மவர்களை இனங்காணும் வகையிலும் நடைபெறும் ஓர் விழா எனக் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினர் திரு. ரி. ரி. பிள்ளை மங்கள விளக்கையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட லயன்ஸ் கிளப் பிரமுகர் திரு. சக்திவேல் கொடியையும் ஏற்றி வைத்தனர்.

விளையாட்டுப் போட்டியை சங்கானை விளையாட்டு அதிகாரி ஆரம்பித்து வைத்தார். ஒலிம்பிக் தீபம் ஏந்திச் சென்றது முதல் 60 நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பரிசளிப்பு வைபவம் 15ஆம் திகதி மாலை 6-30 மணியளவில் நடைபெற்றது. மெய்வல்லுனர் போட்டிகளில் வெற்றி பெற்ருேருக்கும் வலிகாமம் மேற்கு பிரிவில் எல்லை, உதைபந்தாட்டம் ஆகியவற்றில் வெற்றி பெற்ருேருக்குமான பரிசில்கள் சங்கப் பிரமுகர்களால் வழங்கப்பட்டன

1988ஆம் ஆண்டின் தலைசிறந்த வீரர்களுக்கான பரிசில்கள் மா. தேவதாசன், பிரன்சிஸ் பெரேரா ஆகியோருக்கு வழங்கப்பட்டதை அடுத்து கழகச் செயலாளர் நா. சிவலோகநாதன் நன்றியுரை வழங்கினுர். [இ-6]

## விளையாட்டுப் போட்டி

இரணைதீவு, ஏப்ரல் 25
இரணைதீவு ஞேமன் கத்தோலிக்க பாடசாலையின் வருடாந்த இல்லப்போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் திரு. மு. எமிலியாம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

கல்வி அதிகாரி ஜனுப் சி. எம். இனுநா பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

முழங்காவில் கொத்தணி அதிபர் திரு. க. சாம்பசிவமும் இரணைதீவு பங்குத் தந்தை வண. பிதா ஜெயக்குமாரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். [ச]

## மருதம் இல்லம் முதலிடம்

முல்லைத்தீவு, ஏப் 24
முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தின் வருடாந்த இல்லப் போட்டியில் மருதம் இல்லம் முதலாம் இடத்தையும் முல்லை இல்லம் இரண்டாம் இடத்தையும் குறிஞ்சி இல்லம் மூன்ரும் இடத்தையும் பெற்றன.

முல்லைத்தீவு பிரதம கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முல்லைத்தீவு கொத்தணி அதிபர் திரு. வே. சுப்பிரமணியம் விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினுர். (ச-92)

உதைபந்தாட்டம்

## வெற்றி தோல்வி இல்லை

ஊர்காவற்றுறை ஏப்ரல், 25
வேலணை பள்ளம்புலம் விளையாட்டுக்கழகத்திற்கும் சுருவில் விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டி ஒன்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

சுருவில்பொதுமைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. பி தேவதாசன் மத்தியஸ்தம் வகித்தார்.

இடைவேளைக்கு முன்னர் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டிருந்த இரு விளையாட்டுக் கழகங்களும், இடைவேளைக்குப் பின்னரும் ஒவ்வொரு கோல்களைப் போட்டன.

விளையாட்டின் இறுதியில் தலா 2 கோல்களைப் பெற்றதனுல், மத்தியஸ்தர் மேலும் பத்து நிமிடங்கள் விளையாட அனுமதித்தார்.

தொடர்ந்து ஆடிய இரு விளையாட்டுக் கழகங்களும் எந்தவொரு கோலையும் போடாததால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. (க-16)

## மெய்வல்லுனர் போட்டி

ஊர்காவற்றுறை, ஏப் 25
ஊர்காவற்றுறை - தவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி எதிர் வரும் 29 ஆம்திகதி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். எஸ். சீவரத்தின பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ் விழாவுக்கான ஏற்பாடுகளை விளையாட்டுஅதிகாரி திரு. பே. பொன்னுச்சாமி கவனித்து வருகின்ருர் (க-16)



வேலணையில் சமீபத்தில் கோட்டக்கல்வி அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாண அரசின் கல்வி அமைச்சுச் செயலாளர் ஜனுப். எம். எம். மன்சூர் அலுவலகத்தைத் திறந்து வைத்தார். ஜனுப். மன்சூர், யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி ஆகியோர் உரையாற்றுவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: கே. என். ராஜு)

# வளரும் மாணவ சமுதாயத்துக்கு நூலகம் மிகப் பயன்தரும்

## அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் உரை

காரைநகர், ஏப். 23
வளர்ந்து வரும் மாணவர் சமுதாயத்துக்கு நூலகம் மிகப் பெரும் பயன் தரும் சொத்து ஆகும். அதனுல் அதனைப் பாதுகாத்து பயன் பெறுவது எமது தலையாய கடமை. எமது கல்லூரி நூலகம் பழம் பெரும் நூலகம் என்பதில் பெருமை அடைகிருேம்.

காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலய வருடாந்த அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் கல்லூரி அதிபர் திரு. மு. திருநீலகண்டசிவம் மேற்கண்டவாறு கூறினுர்,

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

எமது கல்லூரியின் கடந்த கால அபிவிருத்தி வேலைகளுக்கு உதவிய பெற்ருேர்கள் நலன்விரும்பிகள் அனைவருக்கும் நான் எனது பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எமது நூலகத்தின் சிதைவு பெரும் இழப்பைத் தந்துள்ளது.


அதன் இழப்பை தாங்க முடியாமல் எமது நூலகர் தனது பதவியை ராஜினுமா செய்துள்ளார். எனவே நாட்டில் இவ்வாருன நிலைமைகள் தோன்ருது தடுக்க பெற்ருேர்கள் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

எமது கல்லூரியின் திருத்த வேலைகளுக்காக கல்வித் திணைக்களம் ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கித்தந்துள்ளது.

மேலும் கல்லூரி உயர்தர கலை, வர்த்தக பிரிவு மாணவர்களின் கல்விக்கு ஆசிரியர் பற்ருக்குறை இருக்கிறது. இதனை நாம் கூடிய விரைவில் தீர்க்க முயற்சி எடுத்து வருகிருேம்.

இப்படி அவர் கூறினுர். [ச-73]

## மக்கள் முகம்



### அ. மரியராசா

திரு. அ மரியராசா, முல்லைத்தீவு கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபையின் உப தலைவராகக் கடமையாற்றுகிருர் இவர் முல்லைத்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழு அங்கத்தவராக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் (மீன்பிடி) நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் ஓர் சிறந்த சமூக சேவையாளர். (ச-92)

## மாணவனின் முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஏப். 25
வீதியில் கண்டெடுத்த சவூதி அரேபிய ட்ருவ்ட் உட்பட மதிப்புள்ள பொருள்களை பொறுப்பான முறையில் ஒரு மாணவன் ஒப்படைத்த சம்பவம் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மாணவரான என். ஷியாம் குமார் என்பவரே இவ்வாறு தான் கண்டெடுத்த பொருள்களை அஞ்சல் திணைக்களப் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் திரு. அ. சீவரத்தினத்திடம் ஒப்படைத்து உரியவரிடம் அவற்றைச் சேர்க்கும்படி கேட்டுக் கொண்டார்.

திரு. சீவரத்தினம் யாழ் மத்திய கல்லூரி அதிபருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் இந்த மாணவனின் பொறுப்புணர்வையும் முன் மாதிரியையும் பாராட்டினுர். (க)

## பதவி உயர்வு

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 25
சாவகச்சேரி நகரசபை பொதுநூல் நிலையத்தில் நூலக உதவியாளர்களாகக் கடமையாற்றிய திருவாளர்கள் ந. ஸ்ரீகாந்தா, செ. அருளம்பலம் ஆகியோர் மன்னுர் பிரதேச சபைக்கு நூலகர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். [ச-117]


## ஒப்புநோக்குநர் பதவிகள்

உதயன் நிறுவனத்தில் ஒப்புநோக்குநராகப் பணிபுரிவதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆகக் குறைந்தது ஜீ. சீ. ஈ. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் அவசியம்.

தமிழில் நிரம்பிய புலமையும், ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சி உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

பகல், இரவு மாறிமாறிப் பணியாற்ற ஆயத்தமாக இருக்க வேண்டும். முன் அனுபவம் உடையவர்களுக்கு மேற்கண்ட வயதெல்லை, கல்வித் தகைமை கட்டாயம் என்பதில்லை.

ஏற்கனவே பத்திரிகை அலுவலகங்களில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு நல்ல சம்பளமும் பேசித் தீர்மானிக்கப்படும்.

29-04-1989 ஆம் திகதிக்கு முன்னர் இரண்டு நற்சான்றிதழ்கள் அத்தாட்சிப்பத்திரங்களின் பிரதிகளுடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு மனுச் செய்யவும்:-

முகாமையாளர் (ஆளணி)
நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் லிமிட்டெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



## தென்னிந்திய யாத்திரைக்கு

எம்மிடம் பதிவு செய்தவர்களில்
ஒரு பிரிவு
27-4-89 அன்று
யாத்திரையை ஆரம்பிக்கின்ருர்கள்.
அடுத்த பகுதியினர் மிக விரைவில்
செல்ல இருப்பதனுல்
முன் கூட்டியே பதிவு செய்யுங்கள்.

தலைமைப் பணிமனை:

## துர்க்காதேவி ரூர்ஸ்

6, நவீன சந்தை மேல்மாடி,
(மக்கள் வங்கிக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

● குறிப்பு:
இந்தியாவில் உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு சகல வசதிகளுடன் அனுமதி பெற்றுத்தரப்படும்.

விபரங்களுடன் விரைவில்
தொடர்பு கொள்ளவும்.
[சி-2323]



## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சின்னத்தம்பி செல்லத்துரை
(பிரதம மருந்தாளர்)

தோற்றம்: 10- 12- 1939
மறைவு: 05- 05- 1988

திதி: 25- 04- 1989

ஓடி மறைந்து விட்டது ஓராண்டு காலம், ஓயாது உங்கள் பிரிவுத் துயரில் துயருறும்

மனைவி, மக்கள்,
மாமா, மாமி, மைத்துனர்கள்.

163/3, கண்டி வீதி,
அரியாலை.
(C/2326)


# கண்டெடுககப்பட்ட அடையாளக் கார்ட்டுகள்

யாழ்ப்பாணம், ஏப். 25
பொது மக்களால் கண்டெடுக்கப்பட்டு உதயன் காரியாலயத்தில் அடையாளக் கார்டுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் 292/2,நாவலர் வீதியில் உள்ள உதயன் காரியாலயத்துக்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

26. 408630169V அன்னலட்சுமி பொன்னுத்துரை, சுதுமலை.
27. 653570560V சோமசேகரம் ஞானசேகரம், வண்ணூர் பண்ணை.
28. 407961285V நாகேஸ்வரி பூபாலசிங்கம், புதுக்குடியிருப்பு.
29. 638642700X ஆறுமுகம் சிவரத்தினபதி, விஸ்வமடு.
30. 076920834V குஞ்சாட்சி சின்னத்தம்பி, நெடுந்தீவு.
31. 296210498V கத்தரீனு அல்பிறட், புங்குடுதீவு.
32. 277901510X வேலு பச்சையம்மாள், டிகான் கலை தோட்டம், ரங்கலை.
33. 346770287V மீனுட்சி ... சின்னக்குளம், வவுனியா.
34. 455872243V ரூபினி பாலசந்திரன், மல்வத்த வீதி, தெகிவலை.
35. 670871800V விசுவலிங்கம் விஸ்வராசா, அராலி.
36. 396100142V மனேன்மணி சபாரத்தினம், கொக்குவில் மேற்கு.
37. 336250170V அன்னபூரணம் இராசையா, மயிலிட்டி வடக்கு, வலி. வடக்கு.
38. 262841944V நல்லையா கந்தையா, உருத்திரபுரம், கரைச்சி
39. 321441297V பொன்னம்பலம் நல்லையா, உடுவில்.
40. 633162948V சிவசுப்பிரமணியம் உதயகுமார் 375, மட்டுவில் தெற்கு, நுணுவில்.
44. 632442378 V நடராஜா சுஹரனரஞ்சன், சம்மாட்டி ஒழுங்கை, மானிப்பாய்
45. நாகன் செல்லையா வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை
46. 645010558 X சோமசுந்தரம் கமலாம்பிகை, டச் வீதி, சாவகச்சேரி
47. 435880169 V புவனேஸ்வரி சுப்பிரமணியம், கோப்பாய் வடக்கு வலி. கிழக்கு
48. 536402390 X வசுந்திராதேவி சதாநந்தம், பெரியகடை, மன்னுர்.
49 633561761 V பண்டாரி தவராஜ், வல்லைவீதி, அச்சுவேலி
50. 502590464 V கபிரியேல் மகிமைநாதன், பாசையூர், யாழ்ப்பாணம்
51. 610872930 V வீரசிங்கம் ஸ்ரீரங்கநாதன், கரம்பன்
52. 600962825 X கிருஷ்ணன் தவராஜா, நவ இல்ல இடம், நோட்டன்பிரிட்ஜ்
53. 466670332 V சிவத்துரை தம்பிராசா, கோண்டாவில்
54. 457333129 V யோசப் நிக்லஸ் ராசநாயகம், பிரிப்ட் கம்புத்தேகம.
55. 566550814 X கலைச்சனுதேவி சாம்... மகளிர் வீதி, யாழ்ப்பாணம்.
56 545960087 V த.சந்திரவதனு சிவாம்பு, மண்டைதீவு தீவுப்பகுதி.
57. 427541587 V பரமேஸ்வரி உடையார், பலாலி.
58. 676792040 V சுந்தரம் ஜமுனுராணி,முரசுமொட்டை
59. 577612153 V மகாதேவன் கலாநிதி, தீவுப்பகுதி சுருவில்.
60. 476752188 X உருத்திரராணி, சிவகடாட்சம், புளியங்கூடல், சுருவில்.
61. 517000388V இந்திராணி கிருஸ்ணராசா, உரும்பராய், வலிகாமம் கிழக்கு.
62. 521583991V திருநாவுக்கரசு திருச்செல்வம் பசார் ஒழுங்கை, வண்ணுர்பண்ணை.
63. 702950759 Vமுத்துலிங்கம் கிருஷ்ணகுமார், சேர். பொன் இராமநாதன் ரோட். யாழ்ப்பாணம்.
64. 51147238[illegible] V ... கிழக்கு புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு

**பொருள்:**

இருவகைப்பட்ட மனம் உடைய பொது மகளிரும் கள்ளும் சூதுமாகிய இம்மூவகையும் திருமகளால் நீக்கப் பட்டவரின் உறவாகும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
25- 04 - 1989 த. பெ. இல: 23

## முறைகேடுகளைத் தவிர்க்க இருதரப்பு ஒத்துழைப்புத் தேவை

புனர்வாழ்வுக்குப் போதிய நிதி, கொழும்பு அரசிடமிருந்து கிடைப்பதில்லை என்று ஒரு புறத்தில் குறை கூறுகிறோம். தமிழ்ப் பிரதேச மக்களின் புனர்வாழ்வுக்கு வெளிநாடுகள் வழங்கும் நிதி உதவிகளை உரிய அளவில் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பாமல் அது புறக்கணிக்கிறது என்பதைக் கண்டிக்கிறோம். தமிழர் புனர்வாழ்விலும், தமிழ்ப் பிரதேசத்தின் புனர்நிர்மானத்திலும் கொழும்பு அரசுக்கும், அதன் அதிகாரிகளுக்கும் அக்கறை இல்லை என்றும் சாடுகிறோம்.

ஆனால், அந்த அரசு வழங்கும் நிதி உதவிகள் நேர்மையான விதத்தில், உண்மையிலேயே தகுதியானவர்களுக்குத்தான் வழங்கப்படுகிறது என்பதை எந்தத் தமிழ் மாவட்டத்திலும் உறுதிபடச் சொல்லமுடியவில்லை!

அநேகமாக தமிழ் மாவட்டங்கள் எல்லாவற்றிலுமே, பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணம் வழங்குவதில் முறைகேடு, துஷ்பிரயோகம், முகமன், மோசடி, ஊழல் நிறைந்து காணப்படுவதாக முறையிடப்படுகிறது!!

இந்த நிலைமை மிகவும் வெட்கக் கேடான ஒன்றாகும். தமிழர்கள் பற்றிய அபிப்பிராயத்தைக் கெடுப்பதாகும்; அவமானத்துக்கு உரியதாகும். கொழும்பு அரசு தமிழ்ப் பிரதேசங்களை மேலும் புறக்கணிக்கவும், அதற்கென ஒரு நொண்டிச் சாட்டைக் கூறுவதற்கு ஒரு வாய்ப்பு அளித்ததாக முடியும், வழங்கும் நிதி உதவிகளையே மோசடி செய்கிறீர்கள், உங்களுக்கு எப்படி உதவி வழங்க முடியும் என்று முகத்தில் அறைந்தது போல அது திருப்பிக் கேட்க இடம் தருவதாகவும் அமையும்;

உண்மையாகப் பாதிக்கப்பட்ட தகுதியுள்ள மக்களுக்கு மட்டுமே புனர்வாழ்வு நிதி உதவிகள் கிடைப்பதற்கு இரண்டு முக்கிய தேவைகள் பூர்த்தி செய்யப்படுவது அவசியம். அதில் ஒன்றை அதிகாரிகள், உத்தியோகஸ்தர்களும், மற்றதை மக்களும் இதயசுத்தியுடன் நிறைவேற்றி ஆக வேண்டும்,

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமே நிதி உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் அக்கறையுடனும், அவதானத்துடனும், மனத்தூய்மையுடனும் அரச அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் தமது கடமைகளைச் செய்ய வேண்டும். மனதிலும் செயலிலும் வேறு சலனங்களுக்கு இடமளிக்கக்கூடாது.

இந்த விடயத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு உள்ள பொறுப்பு சரி சமமான பொறுப்பு, பொது மக்களுக்கும் உண்டு என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. அரசாங்கம் வழங்கும் நிவாரணப் பணம்தானே, சும்மா இருக்கக் கிடைப்பது தானே நாமும் விண்ணப்பித்துப்பெற்றுவிடுவோமே என்ற அற்ப ஆசைக்கு, உண்மையாகவே பாதிக்கப்படாத—நிவாரணம் பெறத் தகுதியில்லாத பொதுமகன் எவனும் அடிமையாகிவிடக் கூடாது. இந்த விடயத்தில் மக்கள் இதய சுத்தியுடனும், நேர்மையுடனும், நீதிக்கும் பயந்து நடந்து கொள்வார்களானால், முறைகேடு, மோசடி, ஊழல் என்பவற்றுக்கு இடமிராது.

மக்களும் சரி, அதிகாரிகளும் சரி மேற்சொன்னவாறு நேர்மையுடனும், இதயசுத்தியுடனும் இப்போது நடந்து கொள்ளவில்லை. அது எல்லோருக்கும் தெரிந்த கசப்பான உண்மை. அதனாலேயே அகதிகளுக்கான, பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத்தில் மோசடி, ஊழல் என்று அவமான நிலை எழுந்துள்ளது.

அதிகாரிகள், உத்தியோகத்தர்களைப் பொறுத்த வரையில் தமது உறவினருக்கு உதவுதல், சலுகை செய்தல், சம்பளத்துக்கு மேலாகச் சிறு 'கிம்பளம்' பெறுதல் போன்ற முறைகேடான எண்ணங்கள் மனதை அலைத்து உலைக்கின்றன.

பொதுமக்கள் தரப்பிலும், பாதிக்கப்படாத பணவசதி உள்ளவர்கள் கூட 'சம்திங்' கொடுத்துத் தாமும் அரசாங்க உதவிப் பணத்தைப் பெற அங்கலாய்க்கிறார்கள், மனுச் செய்கிறார்கள்! பணவசதி இல்லாதவர்களும், தமக்கு நிவாரணம் கிடைக்கத் தகுதி இல்லையென்று தெரிந்தாலும், விண்ணப்பத்தில் பொய்யான தகவல்களைத் தெரிவித்து, அதிகாரிகளின் துணையைப் பெற்று அந்தத் தகவல்களைச் சரியென அங்கீகரிக்கச் செய்து, நிவாரணத்தைப் பெற அலையாய் அலைகிறார்கள்!!

எனவே இருசாராரும் — அதிகாரிகளும், பொது மக்களும் — தமக்குத் தமக்குச் சரியாக நடந்தால், மனச்சுத்தியுடன் நடந்தால், இருசாராரும் ஒத்துழைத்தால், புனர்வாழ்வு நிவாரணத்தில் முறைகேடுகள் ஊழல்கள், மோசடிகள் இடம்பெற இடமிருக்காது.

புனர்வாழ்வு நிவாரணப் பணம் வழங்குவதில் மோசடிகளைத் தவிர்க்க, அதிகாரிகளை இவ்விடயத்தில் கண்காணித்துக் கொள்ள, நிவாரணம் பெற்றவர்களின் பட்டியலைப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என்ற கோரிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுக்கப்பட்டுள்ளது. இது அதிகாரிகள் சரியாகச் செயற்பட்டார்களா என்பதைக் கண்டுபிடிக்க ஓரளவு உதவலாம். ஆனால் பொதுமக்கள் பொறுமையின் நிமித்தம் தகுதியானவர்களையும், தகுதி இல்லாதவர்கள் ஆக்குவதற்கும் உதவி விடும் ஆபத்து உண்டு.

---

★ கூடுதல் ஜனநாயக உரிமை கோரி

# சீன மாணவர் பகிஷ்கரிப்பு இயக்கம் பல்கலைக் கழகங்களில் ஆரம்பம்!

### தீவிரமடையும் அரசியல் நெருக்கடி

பீகிங், ஏப் 24

சீனாவில் பல்கலைக் கழக மாணவர்கள் நாடு தழுவிய பகிஷ்கரிப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர்.

கூடுதல் ஜனநாயக உரிமைகள் கோரி கடந்த சில தினங்களாக பல்கலைக் கழக மாணவர் நடத்தி வந்த ஆர்ப்பாட்ட பேரணிகளின் உச்சமாக, பகிஷ்கரிப்பு இயக்கத்தை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

சீன அரசியலில் ஜனநாயக சீர்திருத்தவாதி என்று கருதப்பட்டவரும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிற்பீரோ உறுப்பினராக இருந்தவருமான திரு. ஹு-யா-பங் அண்மையில் காலமானார்.

அதைத் தொடர்ந்து மாணவர் ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

மாணவர்கள் பகிரங்கமாக வீதிகளில் நின்று அரசுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். தங்கள் இயக்கத்தை தொடர்ந்து நடத்த பொதுமக்களிடமிருந்துநிதி திரட்டவும் மாணவர் ஆரம்பித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டங்களை நடத்தக் கூடாது என்று சீன அரசு தடைவிதித்துஇருந்தும் மாணவர் அதை மீறி நடப்பது அரசு வட்டாரங்களில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதே வேளை —

ஆர்ப்பாட்டம் நடத்தும் மாணவரும் ஷியாங் மாகாணத்தில் மோதிக் கொண்டதில் 130 பொலீஸார் காயமடைந்தனர். பல மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். (எ)

## பி.பி.சி. வானொலி ஊழியர் வேலை நிறுத்தம்

லண்டன், ஏப்ரல் 25

பி. பி. சி. வானொலியின் உள்ளூர் சேவைகள், டெலிவிஷன் நிலையம் ஆகியவற்றின் பத்திரிகையாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் 24மணித்தியால வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இதனால் பி.பி.சியின் உள்ளூர்ச் சேவைகளும் டெலிவிஷன் நிகழ்ச்சிகளும் பாதிக்கப்பட்டன.

16 சதவீத சம்பள உயர்வு கோரி இவ்வேலை நிறுத்தம் நடைபெற்றது.

பி. பி. சி. நிர்வாகம் 7 சதவீத சம்பள உயர்வே வழங்க முன்வந்தது. 25 ஆயிரம் ஊழியர்களில் 18 ஆயிரம் பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். (எ)

### நோர்வேயில் இருந்து

## கனநீர் ஏற்றிச்சென்ற கப்பல் எங்கு சென்றது பற்றி விசாரணை

### இந்தியாவின் உதவி கோரப்படுகிறது

கப்பல் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட கனநீர் எங்கு கொண்டு போகப்பட்டது என்பதைக் கண்டறிய உதவும்படி நோர்வே அரசு இந்தியப் பொலீஸாரைக் கோர உள்ளது.

அணு ஆயுதங்களைத் தயாரிக்க கனநீர் பாவிக்கப்படுகிறது;

1983 இல் கனநீர் ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று தவறுதலாக பம்பாய்த்துறைமுகத்திற்கு போய்ச்சேர்ந்ததாக நோர்வே அரசு கூறியிருக்கிறது.

இது சம்பந்தமான விசாரணைகளை இந்தியாவில் நடத்த நோர்வே பொலீஸாருக்கு அனுமதி வழங்கும்படி நோர்வே இந்திய அரசுக்கு விண்ணப்பிக்க இருக்கிறது.

ராஜதந்திர வட்டாரங்கள் மூலம் இந்தியாவுடன் இது விஷயமாக நோர்வே தொர்டபு கொண்டது பலனளிக்கவில்லை என்று கூறப்பட்டது. (எ)

# நடமாடும் ஏவுகணை நிலையங்கள்; அமெரிக்க அதிபர் அங்கீகாரம்!

வாஷிங்டன், ஏப். 24

அமெரிக்காவில் நடமாடும் ஏவுகணை நிலையங்களை அமைக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அங்கீகாரமளித்து விட்டார்.

இதுகாலவரை நிலத்தடி சுரங்கங்களில் வைக்கப் பட்டிருந்த எம். எக்ஸ். ஏவுகணைகள் இனிமேல் ரயில் பெட்டிகளில் பொருத்தப்பட்டிருக்கும்.

அதற்கு ஏற்றவகையில் ரயில் பெட்டிகள் தயாரிக்கப்படும்.

அவசர சமயத்தில் இந்த ஏவுகணைகள் ரயில் மூலம் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இத் திட்டத்திற்கு அதிபர் அங்கீகாரமளித்திருப்பினும் அமெரிக்க நாடாளுமன்றம் ஏற்றுக் கொள்ளவேண்டும். (எ)

---

★ கைப்பற்றப்பட்ட

# அரபுப் பகுதியில் தேர்தல்; பி.எல்.ஓவின் புதிய நிலைப்பாடு

கெய்ரோ ஏப்ரல் 24

இஸ்ரவேல் துருப்புக்கள் வெளியேறுவதற்கு முன்னர் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பகுதிகளில் தேர்தலை நடத்த வேண்டும் என்ற யோசனையை சில நிபந்தனைகளுடன் பலஸ்தீன விடுதலை இயக்கம் ஏற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

தேர்தல் முடிந்தவுடன் கட்டம் கட்டமாக இஸ்ரவேல் துருப்புக்கள் அரபுப் பகுதிகளில் இருந்து வெளியேறிவிட வேண்டும் என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் நிபந்தனை விதித்திருக்கிறது. (எ)

● ஒற்றேகா ஐரோப்பிய பயணம்

# நிக்கரகுவாவில் அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகள்

மனாகுவா, ஏப்.

நிக்கரகுவா ஜனாதிபதி ஜனரல் ஒற்றேகா பத்து ஐரோப்பிய நாடுகள் சுற்றுப் பயணம் ஒன்றை நேற்று ஆரம்பித்தார்.

வன்செயல்களால் அழிந்து போன நிக்கரகுவாவைப் புனரமைப்புச் செய்வதற்கு தேவையான நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்ள இப் பயணத்தை ஜெனரல் ஒற்றேகா பயன்படுத்துவார்.

இதே வேளை —

மத்திய அமெரிக்க சமாதானத் திட்டத்தை ஏற்கச் செய்யும்படி கொன்ருக் கிளர்ச்சி அமைப்பு, அமெரிக்கா ஆகியவற்றின் மீது நிர்ப்பந்தம் செலுத்தும்படியும் ஐரோப்பிய நாடுகளை ஜெனரல் ஒற்றேகா தனது பயணத்தின் போது வற்புறுத்துவார் என்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் —

அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வரும் சட்டமூலம் ஒன்றில் ஜெனரல் ஒற்றேகா நேற்றுக் கையெழுத்திட்டார்;

இச் சட்ட மூலத்தின் படி-

★ வெளிநாட்டு நிதிஉதவியைப் பெற அரசியல் கட்சிகளுக்கு அனுமதியளிக்கப் படும்.

★ தொலைக்காட்சி, வானொலிஆகியவற்றைப்பயன் படுத்தவும் அரசியல் கட்சிகளுக்கு அனுமதி வழங்கப் படும்.

★ பத்திரிகைத் தணிக்கை நீக்கப்படும் —

என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஆயுதக் கடத்தல் மூவர்மீது வழக்கு

லண்டன், ஏப். 24

தென் ஆபிரிக்க ராஜதந்திரி ஒருவருக்கு பிரிட்டனுக்குச் சொந்தமான விமான எதிர்ப்புத் துப்பாக்கி ஒன்றை இரகசியமாக விற்க முயன்ற சமயத்தில் அமெரிக்கர் ஒருவரும் வடஅயர்லாந்து வாசிகள்இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

ராஜதந்திர உரிமையைக் கோரியதால் ராஜதந்திரிமீது வழக்குத் தொடரப்படமாட்டாது என்றும் ஏனையோர்மீது வழக்குகள் தொடரப்படும் என்றும் லண்டனில் அறிவிக்கப்பட்டது. [எ]

## ஆப்கனிஸ்தானில் 270 பேர் பலி!

காபூல், ஏப்ரல் 24

ஆப்கனிஸ்தானில் நேற்று நான்கு நகரங்களில் அரசுப் படைகளும் முஜாஹிதீன் கெரில்லாக்களும் கடும் சண்டையில் ஈடுபட்டன.

அச்சமயம் 270 பேர் கொல்லப்பட்டனர். பெரும்பாலோர் சிவிலியன்கள் என்று கூறப்படுகிறது. 123 பேர் காயமடைந்தனர். (எ)

---

# ஓய்வு பெற்ற தோட்டத்தொழிலாளிக்கு ரூபா 2,500 வழங்க வேண்டும்

### தோ. தொ. சங்கம் வேண்டுகோள்

நுவரெலியா, ஏப், 25

தோட்டங்களில் வருமானம் இல்லாமல் இருக்கும் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கும், ரூபா 2500/- வழங்க வேண்டும்.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கம் ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான திரு. பி. வி. கந்தையா இதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவைக் கேட்டுள்ளார்.

தோட்டங்களில் தொழிலாளர்கள் ஓய்வு பெறும் போது அவர்களுக்கு பென்ஷன் கிடைப்பதில்லை அவர்களுக்கு மொத்தமாக சேவைக் காலப் பணமும் சேமலாபநிதியும் வழங்கப்படுகின்றன.

இந்தப் பணத்தைகொண்டு அவர்களின் எதிர்கால வாழ்க்கையை சீராக அமைக்க முடியாத நிலை ஏற்படுகின்றது.

இப்படி அந்த வேண்டுகோளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க-58)

## புங்குடுதீவு முருகமூர்த்தி ஆலய உற்சவம்

குருநகர். ஏப்ரல் 25

புங்குடுதீவு கிழக்கு, வீராமலை வயலூர் ஸ்ரீமுருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை பகல் 1 மணிக்கு நடைபெறும்.

விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஸ்ரீ முருகமூர்த்தி தெய்வானை வள்ளி சமேதராய் திருவீதி எழுந்தருளுவார். (க-75)

## பாணவிடைச் சிவன் கோயில் தேர் தீர்த்தம்

புங்குடுதீவு, ஏப்ரல் 25

புங்குடுதீவு பாணவிடைச் சிவன் தேவஸ்தான தேர்த் திருவிழா 29ஆம் திகதி சனிக்கிழமையும், தீர்த்தத் திருவிழா 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

அதே தினத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் ஆலய பரிபாலனதர்மகர்த்தா சபையினரால் நடத்தப்படும். 26ஆம் திகதி நடைபெறும் ஆறும் திருவிழாத் தினத்தில் தீக்குளிப்பு நடைபெறுமெனவும் அறியவருகின்றது. (க)

## காட்டுத்துறை பகவதி அம்பாள் கும்பாபிஷேகம்

மானிப்பாய், ஏப்ரல்25

வண்ணார்பண்ணை அருள்மிகு காட்டுத்துறை பகவதி மாரிஅம்பாள் கோயில் மகா கும்பாபிஷேகம் மே மாதம் முதலாம் திகதி காலை 6-30 மணிக்கும் 7-00 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான ஆரம்பக் கிரியைகள் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகும்.

அம்பாள், வைரவர் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் நடத்தப்படும்.

கோப்பாய் நீலகண்டக் குருக்கள் சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்துவார். (ச-90)

## விசேஷ அபிஷேகம்

முல்லைத்தீவு, ஏப்ரல்25

முல்லைத்தீவு இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் திரு. ந. சிவன், கிளை முகாமையாளர் திரு. எஸ். விக்னராசா ஆகியோர் தலைமையில் இலங்கை வங்கியின் 50 ஆம் ஆண்டு நிறைவையொட்டி முல்லைத்தீவு ஸ்ரீவீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் அபிஷேகம் நடத்தப்பட்டது.

இதில் முல்லைத்தீவு மாவட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ்.எஸ்.மனோகரன் மற்றும் திணைக்கள அதிகாரிகளும் பங்குபற்றினர். [இ-92]

## சித்திரை பௌர்ணமி விழா

முல்லைத்தீவு, ஏப்ரல் 25

முல்லைத்தீவு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சித்திரைபௌர்ணமிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு கடை வீதி [illegible] சிறப்பாக இங்கு கொண்டாடப்பட்டது. [இ-92]

## திருத்தலப் பாதயாத்திரை

சாவகச்சேரி ஏப், 25

தென்மராட்சித் திருத்தலப் பாதயாத்திரை சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் கோவிலில் இருந்து ஆரம்பமானது.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை நகராட்சி மன்றச் செயலாளர் திரு. த. நவரத்தினராசா ஆகியோர் ஆசி வழங்கித் தொடக்கி வைத்தனர்.

ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா தலைமையில் சுமார் நூறு அன்பர்கள், ஆண்களுமாக இக்குழுவில் இடம் பெற்றனர்.

முதல் நாளன்று வாரிவனநாதர் சிவன்கோவில், வாரியப்பர் சிவன் கோவில் முதலான இருபதுக்கும் அதிகமான திருத்தலங்களைத் தரிசித்தனர். (இ-31)

## அடிக்கல் நடுகை

சாவகச்சேரி, ஏப். 25

சாவகச்சேரி நகரசபைக் காரியாலய விஸ்தரிப்புக்கான மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் திங்கட்கிழமை நடைபெற்றது.

சுமார் பத்துலட்சம் ரூபா செலவில் உருவாகும் இக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நகரசபையின் செயலாளர் திரு. த. நவரத்தினராசா நட்டார். [ச-31]

# விவேகானந்தர் குறிக்கோளை நடைமுறைப்படுத்த வேண்டும்

### சுவாமி சித்ரூபானந்தா உரை

பருத்தித்துறை ஏப்ரல்25

"பசித்தவனுக்கு உணவு, கல்வி அறிவற்றவனுக்குகல்வி, வீடுஇல்லாதவனுக்குவதிவிடம் இதுவே சுவாமி விவேகானந்தரின் செயல் முறை வேதாந்தம். இந்த உயரிய குறிக்கோளை நாம் நடைமுறைப் படுத்த வேண்டும்;

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா அண்மையில் புதுவருடத்தை ஒட்டி நடைபெற்ற விசேஷ வழிபாட்டின் பின்னர் உரையாற்றிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (சு-118)

## பரிசு வழங்கும் நிகழ்ச்சி

கோப்பாய், ஏப். 25

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி நாளான நாளை புதன்கிழமை நடைபெறும் பரிசு வழங்கும் நிகழ்ச்சிக்கு சாவகச்சேரிஉதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வே. கந்தையா, துரைராஜா, க. விக்கின ஆகியோர் கலந்து கொள்வர். [இ-72]

## வற்றிய கிணறுகள்

தற்பொழுது நிலவும் கடும் வரட்சியினால் கோப்பாய் மந்தை மேய்க்கும் வெளியில் உள்ள கிணறுகள் நீரின்றி வரண்டு காணப்படுகின்றன. [இ-72]




ஒரு சமயம் புனித ரமழான் மாதம் வந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் இம்மாதம் உங்களிடம் வந்துள்ளது. இதில் ஓர் இரவு உண்டு. அது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும். அந்த இரவின் பயனை இழந்து விடுபவர், எல்லாப் பலன்களையும் இழந்து விடுகின்றார்.

**ஸஹர் முடிவு: 4-25**
**நோன்பு திறக்கும் நேரம்: 6-20**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜோன்சன் JOHNSON**

வெளியிணை இயந்திரங்களையும், உதிரிப்பாகங்களையும்
ரேலர் மடிநூல் முக்கால், ஒன்று, ஒன்றரை இரண்டு மில்லி மீற்றர் வகைகள், போயா வலைநூல் போன்ற கடற்றொழில் உபகரணங்களையும் மலிவு விலையில் வாங்க

**சென். அன்ரனீஸ்,**
63, யூதாததேயு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.



# உதயன்

25 - 04 - 1989 செவ்வாய்க்கிழமை



**வாடிக்கையாளர்களே!**

எம்மிடம் சொற்ப கையிருப்பே உள்ள ஜோண்சன் (H.P. 10) வெளியிணை இயந்திரங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள முந்துங்கள்!
முக்கால், ஒன்று, ஒன்றரை, இரண்டு மில்லி மீற்றர் ரேலர் மடிநூல் வகைகளையும், போயா வலைநூல் வகைகளையும் மற்றும் கடற்றொழில் உபகரணங்கள். வெளியிணை இயந்திர உதிரிப்பாகங்களுக்கு

**சென். அன்ரனீஸ்,**
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.


## பேச்சுவார்த்தைக்குப் புலிகள் நிபந்தனை ஏதும் விதிக்கவில்லை

### அமைச்சர் ரஞ்சன் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 25
முன் நிபந்தனை ஏதும் விதிக்காமலேயே அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வந்திருப்பதாக அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன அறிவித்திருக்கிறார்.

இந்த விடயம் தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எப். இயக்கச் செயலாளர் நாயகம் திரு. கே. பத்மநாபா தெரிவித்ததாக நேற்று 'சன்' பத்திரிகையில் வெளிவந்த அறிக்கையை இலங்கை அரசின் சார்பில் அவர் மறுத்திருக்கிறார்.

மூன்று கோரிக்கைகளுக்கு இணங்குவதன் மூலம் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே உத்தியோக பேச்சுக்கள் நடத்தப்படவிருப்பதாக தமது இயக்கத்துக்குத் தகவல் கிடைத்ததாக திரு. பத்மநாபா தெரிவித்திருந்தார்.

★ இந்திய அமைதிப்படையைத் திருப்பி அழைத்தல்.

★ வடக்கு - கிழக்கு மாகாணசபையைக் கலைத்தல்

★ கனடிய அரசியல் அமைப்புக்கு அமைய இலங்கை அரசியல் யாப்பை திருப்பி அமைத்தல் ஆகியவையே இந்த மூன்று கோரிக்கைகள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

திரு. ரஞ்சன் விஜேரத்ன இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இத்தகைய கோரிக்கைகளை விடுக்கவில்லை

இலங்கை அரசு எந்தவித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை.

அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு பகிரங்கமாகவே அழைப்பு விடுத்தது. விடுதலைப் புலிகள் இயக்கமும் பகிரங்கமாகவே அரசின் அழைப்பை ஏற்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ பிரதிநிதியுடன் பூர்வாங்க பேச்சுக்களே நடைபெற உள்ளது.

பேச்சுக்களை எந்த இடத்தில், எப்போது நடத்துவது, பூர்வாங்க நிகழ்ச்சி நிரல், தூதுக் குழுவில் இடம்பெறுபவர், மற்றும் பிரச்சினைகள் பற்றி பேசி இணக்கம் காண்பதற்காகவே இச்சந்திப்பு இடம்பெற உள்ளது.

நேர்மையான சிந்தனையுடைய இலங்கையரும் இயக்கங்களும் அரசியல் குழுக்களும் பேச்சுக்களைக் குழப்பாமலும் முட்டுக்கட்டை போடாமலும் அரசுக்கு உதவ முன்வரவேண்டும்.

வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டவர்கள் பேச்சுக்கள் மூலமும் நல்லிணக்கம் மூலமும் ஜனநாயக வழியில் இணைந்து கொள்வதற்கு வாய்ப்பளிப்பதே அரசின் நோக்கம்.

-இப்படித் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

### நாச வேலையே காரணம்

கொழும்பு, ஏப்ரல் 25
ஹட்டனில் கொட்டகல என்ற இடத்தில் கடந்த வியாழன் ரயில் வண்டி ஒன்று தடம்புரண்டதற்குக் காரணம் நாசகாரச் செயலே என்று பூர்வாங்க புலன் விசாரணையில் தெரியவந்திருக்கிறது.

இச்சம்பவத்தின்போது ஒரு ரயில் ஊழியர் மரணமடைந்தார். 28 பயணிகள் காயம் அடைந்தனர். [உ-எ]

### அச்சுநகர் சூசையப்பர் திருநாள்

பலாலி, ஏப்ரல் 25
அண்மையில் பத்து லட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்ட அச்சுவேலி — அச்சுநகர் புனித சூசையப்பர் திருநாள் கடந்த சனிக்கிழமையன்று ஆயத்த ஆராதனைகளுடன் ஆரம்பமாகின.

பங்குத் தந்தை அருட்திரு. றெக்னோ அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அருட்திரு. யேசுதாசன் அடிகள் மறையுரையை நிகழ்த்தினார்.

இத் திருநாள் எதிர்வரும் மே முதலாம் திகதி வரை தொடரவுள்ளது. எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை ஆராதனையும், 30ஆம் திகதி மாலை 6 மணிக்கு திருச்சுருப சுற்றுப்பிரகாரமும் முதலாம் திகதி காலை 6.30 மணிக்கு திருநாள் கூட்டுப் பலியும் இடம்பெறும். (ஓ 119)

### 80 ராணுவ அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி!

கொழும்பு, ஏப்ரல் 25
80 இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு டேராடூன் இராணுவக் கழகத்தில் பயிற்சி வழங்க இந்தியா முன் வந்திருக்கிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இராணுவப் பயிற்சியும், இராணுவ உதவியும் வழங்குவதற்கான விதிமுறைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

### இரு டாக்டர்கள் கைது!

தீவிரவாத சந்தேக நபர் ஒருவருக்கு சிகிச்சை அளித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பில் உள்ள இரண்டு டாக்டர்களை பொலீஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்தனர்.

சுயாதீன வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் டாக்டர் பெர்னாட் சொய்ஸாவும், இலங்கை இராணுவத்தில் கௌரவ சர்ஜனாக செயற்பட்டு வரும் எல். யு. அபயகிரியுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைக்காக இந்த இரண்டு டாக்டர்களும் ஹோமகம உதவிப் பொலீஸ் அதிபர் அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (உ-எ)

### துண்டாடப்பட்ட சடலங்கள் பாலத்தில் கிடந்தன!

பிட்டிகல பொலீஸ் பகுதியில் பாலம் ஒன்றின் மீது இரண்டு சடலங்கள் கடந்த ஞாயிறு கண்டுபிடிக்கப்பட்டன.

ஒரு சடலம் தலையின்றி இருந்தது. மற்றச் சடலம் கைகளின்றிக் காணப்பட்டது.

சடலங்களின் அருகில் கொலைகளுக்கு உரிமை கோரி 'பிரா' இயக்கத்தின் துண்டுப் பிரசுரம் ஒன்றும் காணப்பட்டது.

ஜே. வி. பிக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று துண்டுப் பிரசுரத்தில் எழுதப்பட்டிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமைதான் பிட்டிகல பொலீஸ் நிலையம் தென்பகுதித் தீவிரவாதிகளினால் தாக்கப்பட்டது.

இதேசமயம் திக்வல பகுதியில் வீதி ஓரத்தில் ஒரு தம்பதியரின் சடலங்கள் காணப்பட்டன. (உ-எ)

### ஜோர்ஜியாவில் ஆர்ப்பாட்டம்

மாஸ்கோ, ஏப்ரல் 24
ஜோர்ஜியா மாநிலத்தில் அரசு உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றோரை சோவியத் படையினர் கலைத்துவிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தை நடத்தத் தூண்டியவர்கள் என்ற சந்தேகத்தின் மீது 47 பேரை பொலீஸார் கைது செய்தனர்.

கூடுதல் சுயாட்சி கோரி ஜோர்ஜியா மாநில மக்கள் சில தினங்களுக்கு முன்னர் கிளர்ச்சி நடத்தினர் என்பதும் அதை இராணுவத்தினர் அடக்கிய போது ஏற்பட்ட மோதலில் 19 பேர் கொல்லப்பட்டனர் என்பதும் தெரிந்ததே! (எ)

### கால்நடை....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தல் விடப்பட்டு, இறைச்சிக் கடைகளைப் பூட்ட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் யாழ். குடாநாட்டில் பால் குடிக்கும் மக்களுக்கு மரணம் கிடையாதா?

இறைச்சி சாப்பிட வேண்டாம் என்று அறிவித்தவர்கள் மாடு, ஆடு சுரக்கும் பாலையும் பருக வேண்டாம் என்று அறிவித்திருந்தால் இறைச்சிக் கடைச் சங்கம் ஆட்சேபனை தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

எந்த ஒரு சபையின் அதிகார அனுமதியும் பெறுதமின்றி இறைச்சிக் கடைகளை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா? இந்தக் கடைகளில் விற்கப்படும் ஆடுமாடுகள் தொற்றுநோய் பீடிக்காதவையா? — இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### இறைச்சி....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தினம் விநியோகிக்கப்பட்டதாக யாழ் மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமான அறிவித்தல் பிரசுரம்ஒன்றும் 'உதயன்' காரியாலயத்துக்குக் கிடைத்தது.

எனினும் நேற்று மாலைவரை இத்தகைய அறிவித்தல் ஏதும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என யாழ் சின்னக்கடை பகுதியைச் சேர்ந்த — அனுமதி பெற்ற — இறைச்சிக் கடை உரிமையாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (உ)

### கைதான....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தலையீட்டின் பலனாக சென்ற சனிக்கிழமை இந்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களில் 7 பேர் மதுரை மத்திய சிறையிலும், இரண்டு பேர் காரைக்குடிச் சிறையிலும் வைக்கப்பட்டிருந்தனர்.

### ரூ. 6 லட்சம்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரிக்க அரசாங்கத்தினால் யாழ் மாநகர சபை நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவையாகும்.

இந்த வைபவத்துக்கு அமெரிக்க தூதுவருடன் வேறு சில அதிகாரிகளும் வந்திருந்தனர்.


வைபவம் நேற்று மாலை 3.30 மணியளவில் யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது

யாழ் அரச அதிபரும் வைபவத்தில் கலந்துகொண்டார். (ஓ)

---

26 ஆவது

## பிறந்த நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில்: 25 - 4 - 1963

விண்ணுலகில்: 14.10.1988

**பொன்னையா சிறீதரன் (கஜன்)**

சமாதானத்தை நிலைநாட்ட
நீதிக்காக உழைப்போம்.


To Realize
The Dream of Peace
Let us Strive,
For Justice

மனைவி, மகன்.

(252)

---

## 6ஆம் மாத நினைவஞ்சலி



**அமரர் நடராஜா சசிவண்ணன் (ரவி)**

(புங்குடுதீவு - 3)

அன்னை மடியில்: 01 - 01 - 1970

அழிப்பு: 21 - 10 - 1988

மாதங்கள் ஆறு மறைந்தாலும் – உன் நினைவு
மாறாது எம் இதயம் அழுகிறது – உன் நினைவில்!
பாதகமாய் உன்னுயிரை பறித்திட்ட இறைவன் தன்!
பாதார விந்தமதில் பதித்திருப்பான் - உன் உயிரை!
வண்ணா எம் இதய மன்னவனே மறைந்தாயோ!
எண்ணாத நாளில்லை உன் மறைவின் நாட்களினை!
கண்கள் தரும் கண்ணீரும், கனல் பதித்த நெஞ்சுடனும்
விண்ணில் நிறைந்திட்ட வண்ணனுக்கு எம்
அஞ்சலிகள் என்றென்றும்!

தாய், சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

உடுவில் கிழக்கு,
உடுவில்.

[253]

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கிறேஸ் அருளானந்தம் (கிறேஸ் ரீச்சர்)

சில்லாலையைச் சேர்ந்தவரும், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஆசிரியையுமான, திருமதி கிறேஸ் அருளானந்தம் அவர்கள் காலமானார். இவர் காலம் சென்ற திரு. செபஸ்தியாம்பிள்ளை அருளானந்தத்தின் அன்பு மனைவியும், வளோறிடா, ரஞ்சன் (Carter de Costa & Co, Colombo), விளேவியா (லண்டன்), ஜென்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் எமில் அத்தனுசியார், திரு. பீற்றர் போல் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிசா, நிறேஸ், நோயிலின் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், திரு. திருமதி வின்சென்ற் டி. போல் ஆகியோரின் மகளும் அருட்சகோதரி யோசவின்(செபமாலை தாசர் கன்னியர் சபை, அச்சுவேலி), திரு. யோசவ், அருட் சகோதரி பெற்றனில்லா (திருக்குடும்ப கன்னியர் மடம், இளவாலை), அருட்சகோதரி நிசற்று [அதிபர் ரேமன் கத்தோலிக்க வித்தியாலயம், மயிலிட்டி), திரு, சாமிநாதர் திருமதி மறிஸ்ரெலா செல்வராசா, திருமதி அலோசியா விக்டர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

(251)

### சின்னத்தம்பி தம்பிராசா

பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட ஓய்வு பெற்ற சுகாதார பரிசோதகர் (P. H. I) சின்னத்தம்பி தம்பிராசா அவர்கள் 1989.04.18 இல் சிவபதம் அடைந்து விட்டார். அன்னார் கணேசமூர்த்தி (சவுதி), சண்முகநாதன் கோண்டாவில்), மதியாபரணம் ஜேர்மனி), ராஜலிங்கம் (ஜேர்மனி), திருமதி மாலதி, ஸ்ரீ ஆனந்தராசா (ஓமான்) திருமதி ஸ்ரீ ரஞ்சனி கிருஷ்ணராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும், ஸ்ரீ ஆனந்தராசா (பொறியியலாளர் ஓமான்) கிருஷ்ணராசா (பிரான்ஸ்), திருமதி கலாதேவி கணேசமூர்த்தி (இந்தியா), திருமதி சரோஜினிதேவி சண்முகநாதன் (கோண்டாவில்) ஆகியோரின் மாமனாரும், கவிதா, கல்யாண், ஸ்ரீ வீணா, நிசாந்தன், நீரஜா, நிருத்தன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1989-04-20 இல் விவேகானந்தம் கோண்டாவில் மேற்கு கோண்டாவில் என்னும் இல்லத்தில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் பிந்திய இவ் அறிவித்தலை தயவாக ஏற்றுக்கொள்ளும்படி பணிவாகக் கேட்டுக் கொள்கின்றோம்

தம்பிராசா சண்முகநாதன்
குடும்பத்தினர்.

கோண்டாவில் மேற்கு,

(249)

### திரு. மு. ஆ. தம்பையா (Retired Vaccinator)

மானிப்பாயைச் சேர்ந்த திரு. மு. ஆ. தம்பையா சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலம்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், இராஜபூபதி, சிதம்பரநடராஜா (T. R. R. O. முன்னாள் பிரதம லிகிதர் - பொலீஸ் திணைக்களம்) ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், மார்க்கண்டு (Rtd. O.I.C., Price Control Department), மகேஸ்வரி, காலம்சென்ற கனகராஜா, ஆனந்தராஜா (M. L. T. Base Hospital Pt. Pedro), ஸ்ரீமங்களராசா, பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, காரம்பன்), புவனேஸ்வரி, பவளம் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்ற கனகசபாபதியின் சிறிய தகப்பனாரும், ஆறுமுகம், அரியரட்ணம் (Police Dept.) ஆகியோரின் பெரிய தகப்பனாரும், இராதாகிருஷ்ணன் (Construction Manager, Andresan Company), விஜயா, அசோகன், சுபத்திரா, மாயக்கிருஷ்ணன், இராஜேஸ்வரன் (Lecturer, Department of Geography, University of Jaffna), கௌரி, மோகன், டோறிஸ், சேகர், ராஜன் (Switzerland), நந்தகுமார் (India), முரளி (Netherlands), முகுந்தன் (Canada), பிரபாகர், மயூரன், மதுசூதனன் (Students, Hartly College), வாசினி (England), தர்சினி (Australia), மதீஸ்வரன், ஜெகதீஸ்வரன் (National Grindlays Bank) ஆகியோரின் அன்புப் பேரனும், கார்த்திக், பைரவி, கஜன், பிரசன்னா, ஹரிசன்னா, பிரணவன், ரெகான், றஜோ, ஸ்ரீபன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நாளை (26-04-1989) புதன்கிழமை அவரது 'பூவாசா' மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9-00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

"Poovasa"
Inuvil Road,
Manipay

தகவல்:
த. சிதம்பரநடராஜா

[260]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 25 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org